©
தமிழ்நாடு அரசு
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 1.60 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 7] சென்னை, புதன்கிழமை, பிப்ரவரி 15, 2017
மாசி 3, துன்முகி, திருவள்ளுவர் ஆண்டு–2048

## பகுதி II—பிரிவு 1 இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 138, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (D1)த் துறை, 7 டிசம்பர் 2016.]*

**நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம் (நுகர்வோர் விவகாரங்கள் துறை), 29 செப்டம்பர் 2016, புது தில்லி.**

மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தில் (நுகர்வோர் விவகாரங்கள் துறை) 29.09.2016 ஆம் நாளன்று உருவாகி, அதே நாளிட்ட ***இந்திய அரசிதழில்*** வெளியிடப்பட்ட G.S.R. 929(E) ஆம் எண் அறிவிக்கை, பொது மக்களின் தகவலுக்காக இதனால் மீண்டும் வெளியிடப்படுகிறது.

**G.S.R. 929(E).**— 1955ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் (10/1955)3ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 2002 ஆம் ஆண்டு சில குறிப்பிடப்பட்ட உணவுப் பொருட்கள் (உரிமம் பெறும் தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகள்) நீக்கல் ஆணையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், அவ்வாறு ரத்து செய்வதற்கு முன்னர் செய்யப்பட்டவை அல்லது செய்யப்பட வேண்டியிருந்து செய்யாமல் விட்டுவிடப்பட்டவை தொடர்பானவை நீங்கலாக, கீழ்க்காணும் ஆணையை, மத்திய அரசு இதனால், பிறப்பிக்கிறது. அதாவது :–

1. **குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :–**

(1) இந்த ஆணை, 2016 ஆம் ஆண்டு சில குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் (உரிமம் பெறும் தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகள்) நீக்கல் ஆணை என அழைக்கப்படும்.

(2) இந்த ஆணை 01.10.2016 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

2. **விளக்கங்கள்.—**இந்த ஆணையில், சந்தர்ப்பம் வேறுபொருள் குறித்தாலன்றி மற்றபடி.–

(a) “சட்டம்” என்பது 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டம் (10/1955) என்று பொருள்படும்;

(b) “மத்திய அரசு” என்பது நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம், நுகர்வோர் விவகாரங்கள் துறை என்று பொருள்படும்;

(c) "வணிகர்'' என்பவர், பகுதி 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள யாதொரு பொருளின் மொத்த விற்பனையாளராகவோ, சில்லறை விற்பனையாளராகவோ, உற்பத்தியாளராகவோ, தயாரிப்பாளராகவோ, இறக்குமதியாளராகவோ, ஏற்றுமதியாளராகவோ, கொள்முதல் செய்தல், எடுத்துச் செல்லுதல், விற்பனை, வழங்கல், விநியோகம் அல்லது சேமித்தல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ள மற்றும் ஏனைய யாதொரு தொழிலோடும் தொடர்பில் அல்லாத யாதொரு நபர் எனப் பொருள்படுவர். இதில் அவரது பிரதிநிதி அல்லது முகவரும், அடங்குவர். ஆனால் ஒரு சர்க்கரை உற்பத்தியாளர் அல்லது தயாரிப்பாளர் அல்லது இறக்குமதியாளர் அல்லது ஏற்றுமதியாளர் இதில் உள்ளடங்க மாட்டார்; மற்றும்

(d) மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதி ஒன்றுடன் தொடர்புடைய ''மாநில அரசு'' என்பது, அதன் நிர்வாகி எனப் பொருள்படும்.

**3. குறிப்பிட்ட சில உணவுப் பொருட்கள் மீதான உரிமம் பெறும் தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகளை நீக்கல்.—**

(1) யாதொரு அளவிலான கோதுமை, கோதுமைப் பொருட்கள் (அதாவது மைதா, ரவை, சுஜி, ஆட்டா, கூட்டு விளைபொருளான ஆட்டா மற்றும் தவிடு) நெல், அரிசி, முரட்டுரக தானியங்கள், சர்க்கரை, வெல்லம், சமையல் எண்ணெய் வித்துக்கள், சமையல் எண்ணெய்கள், பயறு வகைகள், நீரகச் செறிவூட்டப்பட்ட தாவர எண்ணெய்கள் அல்லது வனஸ்பதி, வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு ஆகியவற்றை யாதொரு வணிகரும் தங்குதடையின்றி வாங்கலாம், இருப்பு வைக்கலாம், விற்பனை செய்யலாம், எடுத்துச் செல்லலாம், விநியோகிக்கலாம், ஒருவகை செய்யலாம், பெறலாம், பயன்படுத்தலாம் அல்லது நுகரலாம் மற்றும் இந்தப் பகுதியின் கீழ் வகை செய்யப்பட்டிருந்தாலன்றி, மற்றபடி, சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட யாதொரு ஆணையின் கீழும், அதற்கான அனுமதி அல்லது உரிமம் தேவையில்லை.

(2) இத்தகைய பொருட்களின் விற்பனைக்காக, பொருட்களைக் கொள்முதல் செய்தல், எடுத்துச் செல்லுதல், விற்பனை செய்தல், வழங்குதல், விநியோகித்தல் அல்லது சேமித்தல் ஆகியவற்றைப் பொறுத்த நேர்வில், துணைப் பகுதி (1) இன் விதித்துறைகள், பின்வருவனவற்றிற்குப் பொருந்தாது, அவையாவன—

(i) 30.09.2017 (2017, செப்டம்பர் 30 ஆம் நாள்) வரையிலான கால அளவிற்குப் பயறுவகைகள்;

(ii) அசாம், மேற்கு வங்காளம், தமிழ்நாடு, கேரளா மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியான புதுச்சேரி ஆகிய மாநிலங்களைப் பொறுத்த நேர்வில் 21.11.2016 (2016 ஆம் ஆண்டு நவம்பர் 21 ஆம் நாள்) வரையிலான கால அளவிற்கும், ஏனைய மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில், 28.10.2016 (2016 ஆம் ஆண்டு அக்டோபர் 28 ஆம் நாள்) வரையிலான கால அளவிற்கும் சர்க்கரை;

(iii) பின்வரும் நேர்வுகளில், இச்சட்டத்தின் கீழ் இருப்பு வரையறைகளைக் கணக்கிடும் செயல்நோக்கங்கள் நீங்கலாக, 30.09.2017 வரையிலான கால அளவிற்கு சமையல் எண்ணெய்கள் மற்றும் சமையல் எண்ணெய் வித்துக்கள். அந்த நேர்வுகள் வருமாறு;—

(அ) சமையல் எண்ணெய்கள் மற்றும் சமையல் எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில், ஏற்றுமதிக்கென இருப்பில் வைக்கப்பட்ட சரக்கு இருப்பு முழுவதும் அல்லது அதன் ஒரு பகுதியானது ஏற்றுமதிகளுக்கானவை என்பதை மெய்ப்பிக்கக்கூடிய வெளிநாட்டு வர்த்தகத் தலைமை இயக்கத்தால் வழங்கப்பட்ட இறக்குமதியாளர்—ஏற்றுமதியாளர் குறியீட்டு எண் வைத்துள்ள, மொத்த வியாபாரியாக அல்லது சில்லறை வியாபாரியாக அல்லது வணிகராக இருந்து வருகின்ற அத்தகைய ஏற்றுமதியாளர் ஒருவர்;

(ஆ) பல்வேறு கடைகள் வைத்துள்ள சில்லறை வியாபாரி ஒருவர் அல்லது பெரிய அளவிலான பல்பொருள் அங்காடி சில்லறை விற்பனையாளர்கள்;

(இ) உணவுப் பொருட்களைத் தயாரிப்பதற்காக உரிமம் பெற்ற உணவு பதப்படுத்துவோரால் மூலப்பொருட்களாகப் பயன்படுத்தப்பட வேண்டிய இன்றியமையா இருப்பு;

(ஈ) சமையல் எண்ணெய்கள் மற்றும் சமையல் எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில், சரக்கு இருப்பின் ஒரு பகுதியானது இறக்குமதியிலிருந்து பெறப்பட்டன என்பதை மெய்ப்பிக்கக்கூடிய மொத்த வியாபாரியாக அல்லது சில்லறை வியாபாரியாக அல்லது வணிகராக இருந்து வருகின்ற இறக்குமதியாளர் ஒருவர்;

ஆனால், வரப்பெற்ற சமையல் எண்ணெய்கள் மற்றும் சமையல் எண்ணெய் வித்துக்களின் இருப்புகள் மற்றும் இறக்குமதியாளர்களால் இருத்திவைக்கப்பட்ட இருப்புகள் ஆகியவற்றை இறக்குமதியாளர்கள் அறிவிக்க வேண்டும் என மத்திய அரசு அல்லது மாநில அரசு உத்தரவிடலாம்.

(3) துணைப்பகுதி (2)ல் உள்ள எவையும் சர்க்கரை, சமையல் எண்ணெய்கள் மற்றும் சமையல் எண்ணெய் வித்துக்களை மாநிலத்திற்கு வெளியேயுள்ள இடங்களுக்கு எடுத்துச் செல்வதை, விநியோகிப்பதை அல்லது ஒருவகைசெய்வதை பாதிக்காது.

**(4) குறிப்பிட்ட நேர்வுகளில் இந்த ஆணையின் செயல்விளைவு:—**

மாநில அரசுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் (காண்க: அப்போதைய வேளாண் அமைச்சகத்தின் (உணவுத் துறை) 17–06–1978 ஆம் நாளிட்ட G.S.R. 800 ஆம் எண்ணுள்ள இந்திய அரசின் அறிவிக்கை) மாநில அரசுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் மாநில அரசு பிறப்பித்த யாதொரு ஆணையில் என்ன சொல்லியிருப்பினும், இந்த ஆணையின் விதித்துறைகள் செயல் விளைவைக் கொண்டிருக்கும். பகுதி 3–ல் குறிப்பிடப்பட்டுள்ள யாதொரு பொருட்களை இருப்பு வைத்தல், எடுத்துச்செல்லுதல், விநியோகம், ஒருவகைசெய்தல், பெறுதல், பயன்படுத்துதல் அல்லது நுகர்தலை உரிமங்கள், அனுமதி வாயிலாக அல்லது வேறு வகையில் முறைப்படுத்தும் செயல் நோக்கத்திற்காக யாதொரு ஆணையை பிறப்பிப்பதற்கு மத்திய அரசின் முன்னனுமதியை மாநில அரசு பெறும்;

ஆனால், இந்த ஆணையில் கண்டுள்ள எவையும் பின்வருவனவற்றின் செயல்பாட்டை பாதிக்காது அவையாவன—

(i) மத்திய அரசால் பிறப்பிக்கப்பட்ட 2001ஆம் ஆண்டு பொது விநியோக முறை (கட்டுப்பாடு) ஆணை அல்லது அதனையொட்டி மாநில அரசால் பிறப்பிக்கப்பட்ட யாதொரு ஆணை;

(ii) இச்சட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழ், மத்திய அரசால் வழங்கப்பட்ட அதிகாரங்களையொட்டி, அரிசி கொள்முதல் செயல் நோக்கங்களுக்காக நெல் அல்லது அரிசி அரவை ஆலை உரிமையாளர்கள் அல்லது வணிகர்களுக்கு வரி விதிப்பதற்காக மாநில அரசால் பிறப்பிக்கப்பட்ட, ஆணைகள்.

[கோப்பு எண்: S-10/4/2016-ECR&E.]

**பி.வி. ராம சாஸ்திரி,**
*இணை செயலாளர்.*

(ஆளுநரின் ஆணைப்படி மீண்டும் வெளியிடப்படுகிறது)

**பிரதீப் யாதவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.